TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051813

1. District மாவட்டம் : கடலூர் PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 12/2020 Date நாள்: 20.11.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 19.11.2020 23.30 hrs Date to : நாள் வரை 20.11.2020 01.30 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.11.2020 Time நேரம் : 1515 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV Time நேரம் : 1515 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் நான்கு கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி TASMAC Shop No.2428
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் 1. ஜெயகுமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் –
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ——
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —— Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர், (g) Address : முகவரி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1) V.செல்வம், மேற்பார்வையாளர், 2) R. முருகன், விற்பானையாளர், 3) S.சங்கர், விற்பனையாளர், டாஸ்மாக் கடை எண்.2428, கடலூர். 4) K.வேல்முருகன், விற்பனையாளர்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 20.11.2020 ந்தேதி மாலை 15.15 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, J.ஜெயகுமார், ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : 20.11.2020 அனுப்புநர் J. ஜெயகுமார், ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் – TASMAC கடை எண் 2428, கடலூர் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 20.11.2020

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.11.2020 at 16.30 hrs

Name: பெயர் S. THIRUVANKADAM.
Rank: நிலை .....................No. எண் .........
Inspector. V&AC
Cuddalore

மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) ஆய்வுக்குழு அலுவலரான J.ஜெயக்குமார் ஆகிய நான் இன்று 19.11.2020ம் தேதி மாலை சுமார் 05.45 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், கடலூர் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அருகருகே இயங்கி வரும் TASMAC கடை எண்.2429 மற்றும் 2428 ஆகிய இரண்டு அரசு மதுபான கடைகளில் மதுபான பாட்டில்கள் ஒவ்வொன்றுக்கும் அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலாக ரூ.10/– முதல் ரூ.30/– வரை பாட்டில் வகைக்கேற்றவாறு விற்பதாகவும் மற்றும் அவர்களது துறை சார்ந்த அதிகாரிகளுக்கு மாமூல் பணம் கொடுத்து வருவதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்சொன்ன தகவலை பெற்று உடன் நான் இன்று 19.11.2020 மாலை சுமார் 06.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் அலுவலகத்திற்கு நேரில் சென்றேன். நிலையத்தில் இருந்த ஆய்வாளர்கள் திரு.D.சண்முகம் மற்றும் திரு.S.திருவேங்கடம் ஆகியோர்களிடம் மேற்சொன்ன தகவலை தெரிவித்தும், திடீர் ஆய்வு மேற்கொள்ள இருப்பதை தெரிவித்தும், திடீர் ஆய்வு இரவு சுமார் 10.00 மணிக்கு செய்யலாம் எனவும், அதற்கு உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடன் ஆய்வாளர் சண்முகம் மற்றும் ஆய்வாளர் திருவேங்கடம் ஆகியோர் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் காவல் ஆளிநர்களை தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தினர். தொடர்ந்து இன்று 19.11.2020ந்தேதி இரவு சுமார் 09.15 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர் சண்முகம், ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் ஆளிநர்கள் அனைவரும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு இரவு சுமார் 09.30 மணிக்கு மேற்சொன்ன TASMAC கடை எண்.2428 மற்றும் 2429க்கு சற்று தள்ளி வாகனத்தை நிறுத்தினோம். மேற்சொன்ன டாஸ்மாக் கடைகளானது, கடலூர் பேருந்து நிலையம் – ஸ்மார்ட் சூப்பர் மார்க்கெட் செல்லும் ரோட்டிலிருந்து ரயில்வே இருப்பு பாதைக்கு மேல் உள்ள பாலத்தின் அடியில் சற்று தொலைவில் மேற்கு புறம் பார்த்து அமைந்துள்ளன. அப்போது அந்த டாஸ்மாக் கடைகளில் வியாபாரம் நடந்துக்கொண்டிருந்தது. மேற்சொன்ன கடைகளிலிருந்து மதுபான வகைகளை வாங்கிக்கொண்டு திரும்பிய மதுபான பிரியர்களிடம் அவர்கள் வாங்கி வைத்துள்ள மதுபானத்தின் பெயர் மற்றும் விலை விவரம் கேட்டுத் தெரிந்துக்கொண்டேன். அதன்படி மதுபானத்தின் அரசு நிர்ணயித்த விற்பனை விலையை விட கூடுதலாக மது பாட்டில் ஒன்றுக்கு வகைக்கு தகுந்தாற்போல் ரூ.10/– முதல் ரூ.30/– வரை கூடுதலாக பணம் கொடுத்து வாங்கி வந்ததை தெரிவித்தார்கள். மேற்சொன்ன கூடுதல் விலை சம்மந்தமாக அவர்களை விசாரிக்க வழக்கம்போல் இப்படித்தான் கூடுதலாக

20/11/2020

பணம் கொடுத்து மதுவை வாங்கி வருவதாக பலர் தெரிவித்தனர். மேலும் திடீர் ஆய்வுக்கு வந்த விவரம் உறுதியானது. பின்னர் இன்று 19.11.2020ந்தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு கடையை அடைப்பதற்கு சற்று சில நிமிடங்களுக்கு முன் நான், என்னுடன் வந்த ஆய்வாளர் சண்முகம், ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் காவல் ஆளிநர்கள் மேற்சொன்ன டாஸ்மாக் கடைகளுக்கு அருகில் சென்றோம். கடை எண்.2428க்கு ஆய்வாளர் திருவேங்கடத்தை பாதுகாப்பு பணிக்காக நிறுத்தினேன். தொடர்ந்து அதற்கு அருகில் உள்ள மற்றொரு டாஸ்மாக் கடை எண்.2429க்கு ஆய்வாளர் சண்முகம் மற்றும் ஆளிநர்களுடன் சென்று, இரவு சுமார் 11.30 மணி வரை ஆய்வு முடித்தேன். பின்னர் இரவு சுமார் 11.35 மணிக்கு அருகில் உள்ள மற்றொரு டாஸ்மாக் கடையான எண்.2428ல் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் ஆளிநர்களுடன் கடைக்கு உள்ளே சென்றேன். அப்போது அந்த கடையினுள் நான்கு நபர்கள் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தனர். அவர்களிடம் நான் மற்றும் என்னுடன் வந்த ஆய்வாளர் மற்றும் ஆளிநர்களை அலுவலக அடையாள அட்டையை காண்பித்தும், நாங்கள் திடீர் சோதனை செய்ய வந்துள்ள விவரத்தையும் தெரிவிக்கப்பட்டது. மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து காண்பித்து, குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்துக் கொண்டோம். அந்த TASMAC கடையானது சுமார் 10X12 அடி நீள அகலமுள்ள RCC பில்டிங் இரும்பு கிரில் கேட் போடப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தின் முகப்பின் மேல் புறத்தின் TASMAC, கடை எண்.2428 என்று எழுதப்பட்டிருந்தது. கடையினுள் மதுபான வகைகள் பெட்டி பெட்டியாக, வகை வாரியாக அடுக்கி வைக்கப்பட்டும், சில பெட்டிகள் பிரித்தும் அதில் உள்ள மதுபாட்டில் வகைகள் விற்பனைக்கும் வைக்கப்பட்டு இருந்தது. கடையினுள் இருந்த நபர்கள் பற்றி விசாரிக்க முதலில் கடையின் சூப்பர்வைசர் V.செல்வம், வயது 48, த/பெ, வரதராஜ் என்பவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். மேலும் கடையில் கடையின் விற்பனையாளர்களாக இருந்த P.முருகன், வயது 44, த/பெ, பரமசிவம், S.சங்கர், வயது 45, த/பெ, சுந்தரமூர்த்தி ஆகியோர்களை அறிமுகம் செய்து வைத்தார். அந்த கடையில் விற்பனை பணியில் இருந்த மற்றொரு நபரை பற்றி விசாரிக்க, அவர் பெயர் வேல்முருகன், வயது 43, த/பெ, காசிநாதன் என்றும், தான் அந்த கடைக்கு விற்பனையாளராக நியமிக்கப்பட்ட நபர் இல்லையென்றும், சுப்ரமணியபுரம் டாஸ்மாக் கடைக்கு விற்பனையாளராக நியமிக்கப்பட்டவர் என்றும், அந்த கடையின் சூப்பர்வைசர் V.செல்வம் அழைத்ததின்பேரில், தான் இந்த கடைக்கு வந்து விற்பனையாளர் வேலை செய்வேன் என்றும், அதற்கு அவர் கூலி வழங்குவார் என்றும் தெரிவித்தார். இந்த தகவலை பற்றி அவரிடம் விசாரித்து வாக்குமூலம்

20/11/2020

பதிவு செய்தேன். தொடர்ந்து கடையில் இருந்த சூப்பர்வைசர் V.செல்வம் மற்றும் விற்பனையாளர்களிடம் இன்றைய அவர்களது (1) Attendance Register, (2) Stock Register, (3) Stock Transfer Invoice File, (4)IMFL Transport Permit File, (5) Circular File, (6) Empty Cartons Box Register, (7)Movement Register, (8) Chitta Register, (9) Liability Register, (10) Bar Register, (11)Minor Register, (12) Furniture / Machineries Register, (13) Bill Book, (14)Inspection Register, (15) Cash Denomination Register, (16) Form-V Stock cum Sale Register, (17)Physical Verification Register from 01.07.2020 to 30.09.2020 ஆகியவற்றை எடுத்துக் காண்பித்தார்கள். அதன்படி நான் கடையின் சூப்பர்வைசர் செல்வம் மற்றும் விற்பனையாளர்கள் முன்னிலையில் இன்றைய விற்பனை சம்மந்தமான மதுபாட்டில்களின் எண்ணிக்கை விவரங்களை குறிப்பிட்டு தரவும், அதன் அரசாங்க விலையின் விவரத்தை தெரிவிக்கவும் சொன்னேன். சிறிது நேரம் கழித்து கணக்கீடு செய்த பிறகு கடையின் சூப்பர்வைசர் செல்வம் மற்றும் மூன்று விற்பனையாளர்களும் சேர்ந்து விற்பனை பதிவேட்டில் பதிவாகியுள்ள மதுபான வகைகளின் விற்பனை விலையின் மொத்த கூடுதல் தொகையானது ரூ.4,54,610/– என தெரிவித்தனர். இதனிடையே அவர்கள் முன்னிலையில் கடையின் முகப்பில் போடப்பட்டிருந்த ஒரு மர மேஜையின் டிராயரில் மதுபான விற்பனை செய்த பணம் வைக்கப்பட்டிருந்தது. மேலும் அப்பணத்தை எனது முன்னிலையில் அவர்கள் கணக்கீடு செய்ததில் மேற்சொன்ன இன்றைய விற்பனை தொகை ரூ.4,54,610/– ஐ விட கூடுதலாக ரூ.24,320/– பணம் இருந்தது. இது பற்றி அவர்களிடம் விசாரிக்க மேற்சொன்ன செல்வம் மற்றும் மூன்று விற்பனையாளர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர். அதாவது அரசு மதுபான கடையில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு வகைகளுக்கு தகுந்தவாறு ஒரு பாட்டிலுக்கு ரூ.10/– முதல் ரூ.30/– வரை கூடுதலாக மதுப்பிரியர்களிடமிருந்து பணம் பெற்று விற்பனை செய்வதாக தெரிவித்தனர். மேற்சொன்ன கூடுதல் தொகை வைத்து விற்பனை செய்யப்படும் தொகையிலிருந்து அரசுக்கு செலுத்த வேண்டிய விலைப்பட்டியல் பணம் போக, மீதி பெறப்படும் பணத்தில் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் ரவிக்குமார், காலி அட்டை பெட்டி சேதாரத்தை ஈடு செய்வது, மதுபான பாட்டில்களை லாரியிலிருந்து இறக்கும்போது ஏற்படக்கூடிய சேதாரங்களை தவிர்க்க கூலி ஆட்களுக்கு பணம் கொடுப்பது மற்றும் MD Squad, SRM Squad, DM Squad, கலால் AC, தாலுகா Excise Officer ஆகியோர்களுக்கு அவ்வப்போது கடையை ஆய்வு செய்யும்போது லஞ்சப்பணம் கொடுப்பது வழக்கம் என தெரிவித்தார். மேலும் இன்றைய விற்பனை பணம் ரூ.4,54,610/– ஐ ஆய்வுக்கு பின் மேற்சொன்ன சூப்பர்வைசர் V.செல்வம் மற்றும் மேற்சொன்ன மூன்று

அ. [signature]
20/11/2020

விற்பனையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து மேற்சொன்ன சூப்பர்வைசர் செல்வம் காண்பித்த ஆவணங்களில் (1)Attendance Register, (2) Liability Register மற்றும் (3)Form-V Stock cum Sale Register ஆகிய பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் இரவு சுமார் 11.30 மணி முதல் நள்ளிரவு சுமார் 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது (20.11.2020). மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின்போது, மேற்சொன்ன டாஸ்மாக் கடையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, சம்பவ இடத்தில் இருந்த இதர நபர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. இன்று 20.11.2020ந் தேதி மாலை சுமார் 15.15 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் நேரில் வந்து, 20.11.2020ந்தேதி கடலூரில் TASMAC கடை எண்.2428 யில், மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.24,320/– மற்றும் திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட மூன்று ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) (J. ஜெயகுமார்) ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். அய்யா, நான் இன்று 20.11.2020 மாலை 15.15 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2020, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

20/11/2020
Inspector of Police
VAC Cuddalore